மாவட்டத்தில் செலவழிக்கப்பட்ட தொகை இதுவரையில் மிகக் குறைவாக இருப்பதால், அரசாங்கம் அதிகமான தொகை வசூலாகும் அந்தந்த மாவட்டத்திலேயே அவற்றை செலவழிக்க ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பி. கக்கன் : எவ்வாறு செலவிடவேண்டுமென்று கணக்கு இருக்கிறது. கோரிக்கைகள் வருகின்ற இடங்களைப் பார்த்து பரிசீலனை செய்து போதுமான அளவு செய்துகொண்டு தான் இருக்கிறோம்.

திரு. எஸ். கே. சம்பந்தன் : இந்தப் பணத்திலிருந்து செலவழிக்கக் கோரி ரோடு வசதி போன்றவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கும் கோரிக்கைகளின் மேல் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இனிமேலாவது அமைச்சர் அவர்கள் அவற்றைப் பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. பி. கக்கன் : அப்படி செலவழித்திருக்கிற பட்டியலை படிப்பது என்றால் நேரம் அதிகமாகும். பெரும் பகுதி தென்னாற்காடு ஜில்லாவில் நெல்லிக்குப்பம் பகுதியில் செலவழிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Depressed Classes Federation

*140 Q.—Sri M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Depressed Classes Federation has intimated recently to the Government that unless their demands are met they intend observing the 15th August 1965 as a mourning day;

(b) if so, their demands; and

(c) the decision taken by the Government thereon?

The Hon. Sri P. KAKKAN: (a) It is not possible to answer this question in the absence of definite information from the Member as to what demands of the Federation he is referring to.

(b) & (c) Do not arise.

(அ) பெடரேஷனின் எந்த கோரிக்கைகளைப்பற்றி அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று தெளிவான தகவல் இல்லாததால் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க இயலவில்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Co-operative Societies Loans

* 141 Q.—Sri SP. K. A. LAKSHMANAN CHETTIAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government are aware of the fact that in co-operative societies existing arrears of loans are being adjusted on due period by grant of fresh loans to the concerned societies;

8th November 1965]

(*b*) whether the Government are aware of the fact that in such cases, a sum of Rs. 3 per cent is being received both by the officials and non-officials concerned for getting sanctioned the accommodation; and

(*c*) if so, what steps the Government propose to take to put a stop to this malpractice?

THE HON. SRI N. S. S. MANRADIAR : (அ) சில மத்திய பாங்குகளும், ஆரம்பச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கவேண்டிய கடன் நிலுவைகளை, அச்சங்கங்களுக்குப் புதிதாகக் கடன் வழங்குவதன் மூலம் சரிகட்டினவென்று அரசாங்கத்துக்குத் தெரிய வந்துள்ளது. இத்தகைய தவறான வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(இ) இத்தகைய பழக்கங்கள் இருப்பதாக அரசாங்கத்துக்கு தெரியவில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கே. சம்பந்தன் : இந்த மாதிரியான துஷ்பிரயோகங் கள் வெகுநாட்களாக நடந்துவந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் இவற்றை உடனடியாகத் தடுக்க அரசாங்கத்தார் எந்த விதமான நடவடிக்கை எடுத்திருக்கிறார் கள் ?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : இப்போது இதற்கு இடைவேளை கொடுக்கப்படுகிறது; 15 நாட்களுக்குப் பிறகுதான் புதிய கடன் பெற முடியும் என்று இடைவேளை கொடுக்கப் படுவதால் இந்த மாதிரியான 'மால்ப்ராக்டிசெஸ்' நடக்க முடியாது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : பதினைந்து நாள் இடைவேளை கொடுக்கும் முறை இருந்தாலும், பல செண்ட்ரல் பாங்குகளிலும், ப்ரைமரி பாங்குகளிலும் சொசைடிகளிலும் இது சரியாக அமல் நடத்தப்படவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக் கிறதா ? இவ்வாறு நடக்கிறதா என்று அரசாங்கம் மேலும் கவனிக்குமா ?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : இதற்கு, மூலக் கேள்விக்கு பதிலளித்தபோதே பதில் சொல்லியிருக்கிறேன். இந்த மாதிரியான 'மால்ப்ராக்டிசெஸ்' நடக்காமலிருப்பதற்கு நாங்கள் நிறைய ஏற்பாடுகள் செய்து வருகிறோம். ஆகையால் இனிமேல் இந்த மாதிரியான 'மால்ப்ராக்டிசெஸ்' இருக்க முடியாது.

Joint Farming Societies

* 142 *Q*.—SRI N. V. NATARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Central Government have suggested to the State Government that the number of Joint Farming Societies should be increased; and